10

# ஆறு மணி நேரம், 2

## மத்தேயு 27:45-54; மாற்கு 15:33-39; லூக்கா 23:44-47; யோவான் 19:28-30

*"இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவான் 19:30).*

### கடைசி மூன்று மணி நேரம்

சிலுவையின்மீது இயேசுவின் கடைசி மூன்று மணி நேரம், அச்சம் நிறைந்த, இயற்கைக்கு மாறான இருளினால் உடுத்துவிக்கப்பட்டிருந்தது. மரித்துக்கொண்டிருந்த மூன்று மனிதர்களின் வேதனைப் புலம்பல்களும் இரத்தம் சொட்டும் சத்தமும் மாத்திரமே எவரொருவரும் கேட்கக்கூடிய ஒலிகளாக இருந்தன.

கடைசி மூன்று மணி நேரத்தில், இயேசு விரைவான தொடர்வரிசையில் மேலும் மூன்று கூற்றுக்களைக் கூறினார். அவர், "ஏலி, ஏலி, லாமா சபக்தானி?" என்று கதறினார். மொழிபெயர்க்கப்படும்போது, இது "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அர்த்தப்படுகிறது (மத்தேயு 27:46; மாற்கு 15:34). இயேசு பாவமாவதற்குத் தேவன் அனுமதித்தார் (2 கொரிந்தியர் 5:21). இதனால், தேவனும் இயேசுவும் பிரிக்கப்பட்டனர். இது எவ்வளவு பயங்கரமானது! ஓ, பாவத்தின் ஆழம் தான் எத்தகையது!

மனிதனால் ஏற்படுத்தக்கூடிய எந்தத் தண்டனையைக் காட்டிலும் தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்பது தேவகுமாரன்மேல் ஆழமான காயமாக இருந்தது. இந்தக் கூற்றானது மனிதனின் இழந்துபோகப்பட்ட தன்மை மற்றும் அவரது நம்பிக்கையற்ற நிலை ஆகியவற்றை உரத்துக் கூறுகிறது. இயேசுவின் மரணம், பாவத்தை வெற்றிகொண்டது மட்டுமின்றி, அது மரணத்தையும் வெற்றி கொண்டது (எபிரெயர் 2:14-18). கிறிஸ்தவர்கள் மரணத்தைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை. சாத்தான் தோற்கடிக்கப்பட்ட விரோதியாக இருக்கிறான்; பாவம் என்பது வெற்றி கொள்ளப்பட்ட சாபமாக உள்ளது. மரணம் தனது கொடுக்கை இழந்து போயிருக்கிறது (1 கொரிந்தியர் 15:21-26, 51-58).

தேவனுடைய சித்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததை அறிந்த இயேசு, "தாகமாயிருக்கிறேன்" என்று கூறத் தம்மை அனுமதித்தார்.

கிறிஸ்துவின் ஐந்தாம் கூற்றான இதில், அவரது மனிதத்துவம் காணப்படு கிறது. "தாகமாயிருக்கிறேன்" என்பது மனிதத்துவத்தின் மிக ஆழமான கதறு தலாக உள்ளது (யோவான் 19:28, 29). மலிவான திராட்சரசம் அங்கிருந்தது. நேர்த்தியான சில விஷயங்கள் இயேசுவுக்குச் செய்யப்படும்போதுகூட, அது மலிவானதாகவே இருந்தது. "ஜீவ தண்ணீர்" தாகமாயிருந்தார்! (யோவான் 6:51-58). இயேசு தமது மனிதத்துவத்தை நீக்கிப்போடுவதற்குத் தமது தெய்வீகத்துவத்தைப் பயன்படுத்தவில்லை.

சிலுவையில் அறையப்படுதல் என்பது ஒருவரின் மனிதத்துவ உரிமைகள் எல்லாவற்றையும் நீக்கிப் போடுவதாக இருந்தது. ஏசாயா, "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியி னாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்" என்று எழுதினார் (ஏசாயா 52:14). யூதர்கள் மேசியாவை எதிர்நோக்கியிருந்தனர், ஆனால் அவர் வந்தபோது அவர்கள் அவரைப் புறக்கணித்துச் சிலுவையில் அறைந் தனர். அவர்களின் நம்பிக்கையாக இருந்தவர் அவர்களுக்கு மரணமானார். மேசியா இல்லாத ஒரு மதத்தைப் பார்க்கிலும் வெறுமையானது வேறு எதுவும் இல்லை.

தேவன் மாறுபவரல்ல. தேவகுமாரனாகிய இயேசு சிலுவையில் இருந்தவராக, தேவன் எப்படி இருப்பார் என்பதைச் சித்தரித்தார். அவர் ஆறுமணி நேரம் சிலுவையில் இருந்த பின்பு, அவரால் மாத்திரமே கூறக்கூடிய கூற்று ஒன்றைக் கூறினார்: "முடிந்தது!" (யோவான் 19:30). "பணி செய்யப்பட்டுவிட்டது!" இப்போது, தேவன் பாவிகளை நியாயந்தீர்க்கையில் நீதியுள்ளவராக இருக்க முடியும். நமது இரட்சிப்புக்காகத் தேவன் எவற்றைச் செய்யும்படி இயேசுவை அனுப்பினாரோ, அவற்றைத் தாம் முடித்துவிட்டதாக இயேசு கூறினார். பரலோகம் என்பது நித்தியமாக இருக்க வேண்டும்; தேவன் நமக்காகச் செய்துள்ள எல்லாவற்றையும் புரிந்துகொள்வதற்கு நமக்கு நித்தியம் முழுவதுமான கால அளவு தேவைப்படும். தேவனுடன் இருக்கையில், நாம் அவரது மகிமையை இன்னும் புரிந்துகொள்வோம். அங்கே இயேசு (வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் சித்தரிக்கப்பட்டுள்ளபடி) "ஆட்டுக்குட்டியானவராக" இருப்பார். "முடிந்தது!" என்று கூறியதன்மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தினார் என்பதை நித்தியம் முழுவதும் அறிவிக்கும்.

மனிதரால் முடிக்க இயலாததை, இயேசு செய்தார். (குற்றம் சாட்டுபவ னான) சாத்தானுடைய வாய் அடைக்கப்பட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 12:9-11). மோசேயின் பழைய நியாயப்பிரமாணம் சிலுவையில் வைத்து ஆணியால் அறையப்பட்டது. கிறிஸ்துவின் புதிய பிரமாணம் நடை முறைக்கு வந்தது (எபிரெயர் 8:6-13; 9:12-18; 10:4-14, 18-31). "முடிந்தது!" என்பது கூறப்பட்டவற்றிலேயே மாபெரும் வார்த்தையாகும்.

இயேசு சிலுவையிலிருந்து தமது கடைசிக் கூற்றை உரத்த சத்தத்துடன், கூறினார்: " 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச்

சொல்லி, ஜீவனை விட்டார்'' (லூக்கா 23:46). இது திகைப்புக்குரிய விஷயம்! அவர் கதறுவதற்கு மாபெரும் முயற்சி தேவைப்பட்டது. அவர் தமது கடைசி வார்த்தைகளை எல்லாரும் கேட்க வேண்டுமென்று விரும்பினார். அவர் தமது சரீரத்தையோ அல்லது தமது மூச்சையோ தேவனிடத்தில் ஒப்புவிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் தமது ஆவியை ஒப்புவித்தார். தேவகுமாரனாகிய இயேசு, மரிப்பதைத் தேர்ந்துகொண்டார்!

நமது இரட்சிப்புக்காக இயேசு தம்முடைய எல்லாவற்றையும் கொடுத்தார்! அவரைப் பின்பற்றுவோர்கூட தியாகம் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும். சபை ஒன்று மாத்திரமே அதன் உறுப்பினராயில்லாதவர்களுக்குப் பயன் தருவதற்காக உலகில் நிலவுகிற ஒரே நிறுவனமாகும்.

## சிலுவையின் மகிமை

இயேசு தாம் மகிமைப்படப்போவதைக் குறித்துப் பேசிய அளவுக்குத் தாம் சிலுவையில் அறையப்படப்போவதைக் குறித்துப் பேசியதில்லை. அவர், "பிதாவே, வேளை வந்தது; ... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்"; "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'' என்று கூறினார் (யோவான் 17:1, 5). நமது தேவன் மரணதண்டனைக்கான மிகவும் மனிதத்தன்மையற்ற கருவியை மாபெரும் ஊக்குவித்தலாக மாற்றினார்!

"நமக்கு மேலே" உள்ள தேவனை நீங்கள் புரிந்துகொள்ளாத வரையில், "நமக்குள்ளாக'' அல்லது "நமக்கு அருகில்" இருக்கிற தேவனைப் பற்றிப் பேசாதீர்கள். தேவன் இரண்டு அரியணைகளைக் கொண்டுள்ளார் - ஒன்று உன்னதமான பரலோகத்திலும் இன்னொன்று தாழ்மையான இருதயத்திலுமாகும். சிலுவையை நாம் புரிந்துகொள்ளாத வரையில் கிறிஸ்துவை நாம் புரிந்துகொள்வதில்லை. மகிமைக்குப் பாத்திரரான ஒரே நபர் அதைத் தமது பிதாவுக்குக் கொடுத்தார். கிறிஸ்துவின் சிலுவையைத் தவிர வேறு எதிலும் நாம் பெருமைபாராட்டாதிருப்போமாக (கலாத்தியர் 6:14).

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*